விலை ரூ. 10/=

ஈழநாடு
வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Eelanadu

12.08.2020 புதன்கிழமை

## தேசியப் பட்டியல் பங்கீடு கடும் சிக்கலில் சஜித் அணி!

கொழும்பு, ஓக 12
ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும், பங்காளிக் கட்சித் தலைவர்களுக்குமிடையிலான விசேட கலந்துரையாடலொன்று நேற்றுக் கட்சி தலைமையகத்தில் நடந்தது.

இதன்போது ஐக்கிய மக்கள் சக்திக்கு கிடைத்த தேசியப்பட்டியல் ஆசனங்களைப் பங்கிடுவது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. எனினும், இறுதி முடிவு எதுவும் எட்டப்படவில்லை.

02

# '19' நீங்கினாலும் ஜனாதிபதியின் பதவிக் காலம் நீடிக்கப்படாது!

## உறுதியாகச் சொல்கிறார் பஸில்



கொழும்பு, ஓகஸ்ட் 12
அரசியலமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டம் நீக்கப்பட்டாலும் ஜனாதிபதியின் பதவிகாலம் நீடிக்கப்படமாட்டாது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்-

02

## நுவரெலியாவில் ஆட்சி மாற்றம்!

### மொட்டு வசமாகிறது மாநகரசபை

கொழும்பு, ஓக 12
ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சியின் கீழ் இயங்கும் நுவரெலியா மாநகர சபை வெகுவிரைவில் மொட்டு வசமாகலாம் எனத் தெரியவருகின்றது. இது தொடர்பான பேச்சு நடைபெறுவதாக நம்பகர மான தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னாள் நகர முதல்வருக்கும் முன்னாள் அமைச்சர் ஒருவருக்கும் இடையிலான இது தொடர்பான பேச்சு நுவரெலியாவில் இடம்பெற்றுள்ளது. இந்த பேச்சின்போது முன்னாள் நகர முதல்வரை நியமனத்தின் மூலமாக உள்வாங்குவது எனவும் அதற்கு தற்பொழுது மாநகர சபை உறுப்பினராக பதவி வகிக்

02

## கடமைகளை ஏற்றார் மஹிந்த!



கொழும்பு, ஓக்.5
பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று தமது கடமைகளை அதிகாரபூர்வமாகப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரான மஹிந்த ராஜபக்ஷ கடந்த ஞாயிற்

02

## ரணில், ருவான், சாகல ஆகியோருக்கு ஜனாதிபதி ஆணைக்குழு அழைப்பு

கொழும்பு, ஓக 12
உயிர்த்த ஞாயிறு தாக்கு தல்கள் தொடர்பில் சாட்சி பதிவுகளை மேற்கொண்டு வரும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க, முன்னாள் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன மற்றும் சட்டம் ஒழுங்குத்துறை அமைச்சர் சாகல ரத்னாயக்க ஆகியோரை சாட்சியம் அளிக்க அழைத்துள்ளது.

இதன்படி ருவான் விஜயவர்த்தன ஓகஸ்ட் 18ஆம் திகதியும் ரணில் விக்ரமசிங்க மற்றும் சாகல ரத்னாயக்க ஆகியோர் ஓகஸ்ட் 21ஆம் திகதியும் ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

## கொள்கையில்லாதவர்களுடன் சேர்ந்து பயணிக்கமாட்டோம்

### கஜேந்திரகுமார் திட்டவட்டம்



யாழ்ப்பாணம், ஓக 12
"தமிழ் மக்கள் எங்களுக்கு வழங்கிய ஆணையை ஒரு போதும் நாங்கள் மீறி செயற்பட போவதில்லை. கொள்கையை முன்னிறுத்தியே எமது செயற்பாடுகள் அமையுமே தவிர கொள்கை இல்லாத வர்களுடன் ஒருபோதும் நாம் சேர்ந்து பயணிக்கப்

02

## கூட்டமைப்புடன் இனி பேச்சில்லை!

### கூறுகிறார் தினேஷ் குணவர்தன



கொழும்பு, ஓக 12
தமிழ் மக்களின் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் பேசுவதற்கான எந்தத் தேவையும் அரசுக்குக் கிடையாது. எங்களுடன் உள்ள தமிழ்ப் பிரதிநிதிகளுடனேயே பேசுவோம் என தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்,

தமிழ் மக்களின்

02

## மேர்வின் சில்வாவின் மகன் கைது



கொழும்பு, ஓக 12
கொழும்பு, பத்தரமுல்ல பகுதியில் தொழிலதிபர் ஒரு வருக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்த குற்றச்சாட்டு தொடர்பாக முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக்க சில்வா கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் மாலக்க சில்வாவை கைது செய்ய தலங்கம பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்று நேற்று முன் தினம் நுகே கொடையில் உள்ள மேர்வின் சில்வாவின் இல்லத்துக்குச் சென்றிருந்தது.

எனினும் இதன்போது மேர்வின் சில்வாவும், அவரது மகன் மாலக்க சில்வாவும்

02

## யாழ். சிறைச்சாலையில் தடுப்பிலிருந்தவர் சாவு!

யாழ்ப்பாணம், ஓக 12
இந்தியாவிலிருந்து சட்டத் துக்குப் புறம்பாக படகுமூலம் நாட்டுக்கு வருகை தந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்தவர் நோய்வாய்ப்பட்ட நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று செவ்வாய்கிழமை உயிரிழந் தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வல்வெட்டித்துறை நெடியகாடுப் பகுதியைச் சேர்ந்த சத்தியமூர்த்தி பாலகிருஷ்ணன் (வயது-50)

02

## கூட்டமைப்பை பிளக்கும் நோக்கம் எம்மிடமில்லை

### உறுதிபடக் கூறுகிறார் செல்வம்

யாழ்ப்பாணம், ஓக 12
தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பில் இருந்து பிரிந்து தனித்து செயற்படவுள்ளதாக வெளியான செய்திகள் உண்மையற்றவை என தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்

02

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## நுவரெலியாவில்...

கின்ற ஒருவர் தனது பதவியை இராஜினாமா செய்வதற்கு தயாராக இருப்பதாகவும் தெரியவருகின்றது.

கடந்த காலங்களில் நுவரெலியா மாநகர சபையின் செயற்பாடுகள் மிகவும் மந்த கதியிலேயே நடைபெற்று வருகின்றது.அதற்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது ஐக்கிய தேசிய கட்சியின் மாநகர சபையாக இருப்பதே.இந்த நிலைமை தொடருமானால் நுவரெலியா அபிவிருத்தி என்பது கேள்விக்குறியாக மாறிவிடும். எனவே அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டால் மாத்திரமே அபிவிருத்திகளை முன்னெடுக்க முடியும்.

எனவே நுவரெலியா மாநகர சபை ஆட்சியானது மொட்டுகட்சி வசமானால் அபிவிருத்தி மிக விரைவாக முன்னெடுக்க முடியும் என மாநகர சபை உறுப்பினர்களும் பொது மக்களும் கருதுகின்றனர்.

தற்பொழுது நுவரெலியா மாநகர சபையில் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பாக 13 உறுப்பினர்களும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக 2 உறுப்பினர்களும் பொதுஜன பெரமுன சார்பாக 6 உறுப்பினர்களும் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் சார்பாக 2 உறுப்பினர்களுமாக மொத்தமாக 23 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

ஆளும் ஐக்கிய தேசிய கட்சி சார்பாக 13 உறுப்பினர்களும் எதிர்கட்சிகள் சார்பாக 10 உறுப்பினர்களும் பிரதிநிதித்துவம் செய்கின்றனர்.நடைபெற்று முடிவடைந்த பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பாக பிரதிநிதித்துவம் செய்த மூன்று உறுப்பினர்கள் மாற்று கட்சிகளுக்கு தமது ஆதரவை தெரிவித்ததுடன் தேர்தல் பிராசாரங்களிலும் நேரடியாக ஈடுபட்டனர்.

இந்த மூவரில் ஒருவர் சுயேச்சை குழுவில் போட்டியிட்டனர்.எனவே இந்த மூவருக்கும் எதிராக ஐக்கிய தேசிய கட்சி நடவடிக்கை எடுக்குமானால் அவர்கள் அரசாங்கத்திற்கு தங்களுடைய ஒத்துழைப்பை வழங்க முன்வரலாம். அவ்வாறான ஒரு நிலையில் எதிர்கட்சிக்கு 13 அங்கத்தவர்கள் அமர்வதற்கான வாய்ப்பு இருக்கின்றது.

இவ்வாறான ஒரு நிலையில் ஆட்சி அமைக்கும் அதிகாரத்தை எதிர்கட்சிகள் பெற்றுக் கொள்ளும்.இதன்போது ஐக்கிய தேசிய கட்சியை அங்கத்துவம் செய்கின்ற இன்னும் ஒரு சில உறுப்பினர்களும் மொட்டு கட்சிக்கு தங்களுடைய ஆதரவை வழங்கலாம். அவ்வாறான ஒரு நிலையில் மொட்டு கட்சி ஆட்சி அமைப்பதற்கான சந்தர்ப்பம் அதிகமாக இருக்கின்றது. மிகவிரைவில் இந்த மாற்றம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## கூட்டமைப்புடன்...

ஏகப் பிரதிநிதிகள் நாங்களே, நாங்கள் மட்டுமே தமிழ் மக்களுக்கு இருக்கின்றோம் எனக் கூறிக்கொண்டு பிரிவினைவாதம் பேசிக் கொண்டிருந்த கூட்டமைப்பினரைத் தமிழ் மக்களே நிராகரிக்கும் நிலைமை இன்று ஏற்பட்டுள்ளது.

அவர்களின் வாக்கு வீதத்திலும் சரிவு ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிலைமையில் நாங்கள் மட்டுமே தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என அவர்களால் கூறமுடியாது. இதனால் அவர்களுடன் பேசவேண்டிய எந்தத் தேவையும் கிடையாது.

தற்போது அரசில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் இருக்கின்றனர். அவர்களு டன் கலந்துரையாடி அவர்களின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் வழங்கி தமிழ் மக்களுக்குத் தீர்வை வழங்க நடவடிக்கை எடுப்போம். முதலில் தமிழ் மக்களுக்கு அபிவிருத்தியே முக்கியம். அதனைச் செய்ய நாங்கள் தயாராக இருக்கின்றோம்-என்றார்.

## கடமைகளை ஏற்றார்...

றுக்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டிருந்தார்.

களனி ரஜமகாவிகாரையில் இந்த நிகழ்வு இடம்பெற்றிருநத்து. இந்த நிலையில் 13 ஆவது பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ நேற்று தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

அலரி மாளிகையில் நடந்த நிகழ்வில் அவர் முதலாவது கையெழுத்தை இட்டு பணிகளை ஆரம்பித்துள்ளார்.

இந்த நிகழ்வில் பௌத்த பிக்குகள், பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள், மாகாண ஆளுநர்கள், மற்றும் ஆதரவாளர்கள் பெருமளவானோர் பங்கேற்றனர்.

## ‘19’ நீங்கினாலும்...

புதிய அரசமைப்பொன்றை உருவாக்குவதற்கு நாட்டு மக்களின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. மக்களின் ஒத்துழைப்புடன் அதற்கான பணிகள் சுயாதீனமாக இடம்பெறும். அதற்கு முன்னர் அரசியலமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டம் நீக்கப்படும். ஏனெனில் அதில் பல குறைப்பாடுகள் உள்ளன.

19ஆவது திருத்தச்சட்டம் முன்வைக்கப்படுவதற்கு முன்னர் ஜனாதிபதியின் பதவிகாலம் 6 வருடங்களாக இருந்தது. 19மூலம் அது ஐந்து வருடங்களாக குறைக்கப்பட்டது. 19 ஐ நீக்கினால் பழைய நிலைமை திரும்பும். ஆனாலும் 5 வருடங்கள் பதவியில் இருப்பதற்குதான் மக்கள் ஆணை வழங்கியுள்ளனர். அதில் மாற்றம் செய்யக்கூடாது என ஜனாதிபதி அறிவித்துவிட்டார். எனவே, ஜனாதிபதியின் பதவிகாலம் நீடிக்கப்படாது.

அத்துடன், அரசமைப்பின் 18 ஆவது திருத்தச்சட்டத்தின்பிரகாரம் ஜனாதிபதி பதவியை நபரொருவர் இரண்டு தடவைகள் மாத்திரமே வகிக்கலாம் என்ற வரையறை மாற்றியமைக்கப்பட்டது. இதற்கு மக்கள் எதிர்ப்பை வெளியிட்டனர். எனவே, இரண்டு தடவைகள் என்ற நிலைமை உருவாக்கப்படும் - என்றார்.

## கொள்கையில்லாதவர்...

போவதில்லை.”

-இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

கொள்கையில் உறுதியாகச் செயற்படுகின்ற மாற்று என மக்கள் எமக்கு வழங்கிய அங்கீகாரத்தை ஏற்று அதனடிப்படையிலேயே செயற்படுவோம். ஒற்றுமை என்ற பெயரில் போலியான தரப்புக்களுடன் ஒருபோதும் நாம் கூட்டுச் சேர்ந்து பயணிக்கமாட்டோம் என்றும் அவர் கூறினார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் யாழ் ஆயர் இல்லத்தில் ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையை நேற்று சந்தித்துக் கலந்துரையாடினர். இந்தச் சந்திப்பின் முடிவில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது கொள்கைக்கு மக்கள் வழங்கிய ஆணையை நாம் மதிக்கவேண்டும். அந்த ஆணைக்கமையவே எமது செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படும். இந்த இடத்தில் கொள்கையைக் கைவிட்ட தரப்புக்களுடன் நாம் ஒருபோதும் சேர்ந்து பயணிக்கவோ அல்லது அவர்கள் பின்னால் செல்லவோ முடியாது.

ஆகவே எங்கள் கொள்கை இலக்கை அடைவதற்கான அனுகுமுறையை நாங்கள் முன்னெடுக்கின்றபோது மற்றத் தரப்புக்கள் எங்களுக்கு அதற்கான ஒத்தாசையை வழங்கலாம். அதுவும் தாங்களாகவே விரும்பி அதனைச் செய்வதாக இருந்தாலும் நாங்கள் அதனை வரவேற்போம்.

ஆனால் அவர்களுடன் நாங்கள் ஒருபோதும் செல்லமாட்டோம். அவர்கள் விரும்பினால் எம் பின்னால் வரலாம். எமது மக்கள் எமக்கு வழங்கிய ஆணையின் அடிப்படையில் எமது கொள்கை இலக்கை அடைவதற்கு நாம் உறுதியுடன் நேர்மையாக பயணிப்போம்-என்றார்.







பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று தமது கடமைகளை அதிகாரபூர்வமாகப் பொறுப்பேற்றுக் கொண்டார். அலரி மாளிகையில் இந்த நிகழ்வு நடந்தது.

## மேர்வின்...

வீட்டில் இல்லாத நிலையில் பொலிஸ் சிறப்புக் குழு சோதனைகளை ஆரம்பித்திருந்தது.

பத்தரமுல்லைப் பகுதியைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவர் அளித்த முறைப்பாட்டுக்கு அமைவாகவே மாலக்க சில்வாவை கைதுசெய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டிருந்த நிலையில் அவர் நேற்றிரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

## யாழ். சிறைச்சாலையில்...

என்பவரே நீரிழிவு நோய் காரணமாக உயிரிழந்துள்ளார்.

இந்திய முகாங்களில் தங்கிருந்த இருவர் உட்பட சட்டத்துக்குப் புறம்பாக படகு மூலம் யாழ்ப்பாணம் திரும்பிய நான்கு பேர் காங்கேசன்துறை கடற்பரப்பில் வைத்து கடந்த ஜூலை 11ஆம் திகதி கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

காங்கேசன்துறை கடற்பரப்பில் கடற் படையினர் நேற்றுக் காலை சுற்றுக் காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந் தனர். அதன்போது காங்கேசன்துறை கடற்பரப்பில் பயணித்த படகு ஒன்று சோதனையிடப்பட்டது.

அந்தப் படகில் ஒட்டியுடன் நால்வர் பயணித்தனர். அவர்களில் இருவர் இந்திய முகாம்களிலிருந்து சட்டத்துக்குப் புறம்பாக நாடு திரும்பியவர்கள் என்று விசாரணைகளில் தெரிய வந்தது.

நால்வரும் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறை பொலிஸ ார் மூலம் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். நான்கு பேரிடமும் பி.சி.ஆர் பரிசோதனை முன்னெடுக்கப்படவேண்டிய நிலையில் தனிமைப்படுத்தல் நிலையத்தில் வைத்திருக்க நீதிமன்றம் அனுமதியளித்தது.

அவர்கள் நால்வரும் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் கடந்த ஒரு மாத காலமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

## தேசியப் பட்டியல்...

இதனையடுத்து தேசியப்பட்டியல் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் சஜித் பிரேமதாஸவுக்கு வழங்கப்பட்டது.

தேசியப்பட்டியல் தொடர்பில் முடிவெடுப்பதற்காக சஜித் பிரேமதாஸ வுக்கு தமிழ் முற்போக்குக் கூட்டணி இன்றுவரை காலக்கெடு விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கூட்டமைப்பை...

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள அவர், கூட்டமைப்புக்கு கிடைத்த தேசியப் பட்டியல் ஆசனம் தமது சம்மதம் இன்றி வழங்கப்பட்டுள்ளது. எனது உண்மை ஆனால் அதற்காகக் கூட்டமைப்பை பிளவுபடுத்தக் காரணமாக இருக்கப்போவதில்லை.

தம்மை பகடையாக வைத்துக் தமிழரசுக் கட்சியின் தலைவரைப் பிரிக்கலாம் என்றும் கூட்டமைப்பின் 5 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது பக்கம் செய்வார்கள் என்றும் தவறான எண்ணத்தில் சிலர் இவ்வாறு செய்திகளை பரப்பி வருகின்றனர்.

தமிழீழ விடுதலை இயக்கம் தமிழர்களின் இருப்பிற்கும் விடிவுக்காகவும் செயற்படும் அதேநேரம் தற்போது போன்றே கூட்டமைப்பில் மேலும் பலமாக பயணிக்கும்-என்றார்.

# ஈழநாடு

Eelanadu

12.08.2020 புதன்கிழமை

சார்வரி, ஆடி 28


**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.


gmail:- eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 492 7805


## ஒரு தோல்வியடைந்த தலைவர்?

கூட்டமைப்பின் பின்னடைவிற்கு வாக்குகள் சிதறியமையே காரணமென்று கூட்டமைப்பின் தலைவராக அறியப்படும் இரா. சம்பந்தன் தெரிவித்திருக்கின்றார். வாக்குகள் சிதறியதால் கூட்டமைப்பு அதன் ஏகபோகத்தை இழந்தது என்பதை கூறுவதற்கு ஒரு தலைவர் எதற்கு? ஏன் வாக்குகள் சிதறின? கடந்த பாராளுமன்றத் தேர்தலின் போது ஒருமித்து வாக்களித்த தமிழ் மக்கள், ஏன் இம்முறை வாக்களிக்கவில்லை? இதற்கான காரணங்களை ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது ஒரு தலைவரின் கடமை. ஆனால், சம்பந்தனோ தேசிய பட்டியலை இரகசியமாக கொடுப்பதற்காக திட்டங்கள் வகுத்து செயற்பட்டு வெற்றிபெற்றிருக்கின்றார். உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர், தான் விரும்பிய இருவரை திருகோணமலை நகர சபை மற்றும் பிரதேச சபைகளுக்கு தலைவராக்க வேண்டுமென்பதற்காக, திருகோணமலையில் வாரக்கணக்கில் தங்கியிருந்து திட்டங்கள் வகுத்து, மக்களால் தெரிவுசெய்யப்பட்ட இருவரை பதவி விலகச் செய்து, இறுதியில் தான் விரும்பியவர்களை கதிரையில் அமர்த்தினார். ஆனால், தமிழ் மக்களின் நலன்களை சுமந்து செல்லும் கூட்டமைப்பை பலப்படுத்துவதற்கோ, பாதுகாப்பதற்கோ எவ்வித உருப்படியான நடவடிக்கைகளையும் சம்பந்தன் இதுவரை எடுத்ததில்லை.

கூட்டமைப்பின் பின்னடைவிற்கான காரணங்களில் முதன்மையான காரணம் சம்பந்தனின் தலைமைத்துவ ஆற்றலின்மையே. இன்று ஒரு மோசமான பின்னடைவைச் சந்தித்த பின்னர், அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டுமென்று கூறுகின்றார். ஆனால் தமிழ் அரசு கட்சியின் தலைவருக்கு தெரியாமல், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கும் தெரியாமல் தேசிய பட்டியல் ஆசனத்தை, தான் விரும்பிய ஒருவருக்கு வழங்கியிருக்கின்றார். ஒரு விடயத்தில் முடிவெடுக்கும் போது, ஆகக் குறைந்த உட்கட்சி ஜனநாயகத்தைக் கூட, சம்பந்தன் கருத்தில் கொள்ளவில்லை. இதற்கு தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவும், பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோரும் ஒரு காரணம்தான். கட்சிக்குள் கேள்வி கேட்க வேண்டிய நேரத்திலெல்லாம் அமைதியாக இருந்ததும் கூட, கூட்டமைப்புக்குள் உட்கட்சி ஜனநாயகம் சிதைந்து போனமைக்கான முக்கிய காரணமாகும்.

கூட்டமைப்பை மீள் கட்டமைப்புச் செய்ய வேண்டியது காலத் தேவையாகும். கூட்டமைப்பின் பிரதான கட்சிகள் மூன்றினதும் தலைவர்கள் இனியும் இதனைப் பிற்போட முடியாது. இதில் தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் அவர்கள் வீழ்ச்சியை நோக்கியே பயணிக்க நேரிடும். இலங்கையின் பாரம்பரிய கட்சிகள் பெரும் பின்னடைவை சந்தித்திருக்கின்றன. சரியான காலத்தில், சரியான தலைமைத்துவம் இல்லாமையினாலேயே, இலங்கையின் அரசியல் வரலாற்றில் தனித்துவமான இடத்தைப் பெற்றிருந்த ஐக்கிய தேசியக் கட்சி முற்றிலுமாக செயலிழந்து போயிருக்கின்றது. இவ்வாறானதொரு நிலைமை பாரம்பரிய தமிழ் கட்சிகளுக்கும் ஏற்படலாம். கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளும் அதேவேளை கூட்டமைப்பும் ஓர் அரசியல் வரலாற்றின் தொடர்ச்சியாகும். விமர்சனங்கள் இருப்பினும், இந்தக் கட்சிகள் ஒவ்வொன்றும் ஏதேவொரு வகையில் பேணிப் பாதுகாக்கப்படும் போதுதான், அந்தக் கட்சிகள் வழியான வரலாறும் தமிழ் சமூகத்தில் தொடரும். ஒவ்வொரு கட்சிகள் என்பவை ஒரு தேசத்தின் சொத்து. அந்தக் கட்சிகள் சரியானவர்களிடம் கைமாறப்படாது போகுமானால், ஒன்றில் அந்தக் கட்சி அழிந்துபோகும் அல்லது அதன் தனித்துவத்தை இழந்துபோகும். இதில் எது நடந்தாலும் ஒரு வகையில், அது அந்தக் கட்சியின் வீழ்ச்சிதான்.

கூட்டமைப்பை பாதுகாப்பதா அல்லது அதன் அழிவை ஏற்றுக்கொள்வதா? கூட்டமைப்பின் தலைவர்களுக்கு முன்னாலுள்ள பிரதான சவால் இதுவே! இந்த சவாலை அவர்கள் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றனர் என்பதைப் பொறுத்தே, கூட்டமைப்பின் எதிர்காலம் தீர்மானிக்கப்படும். இதுவரை கூட்டமைப்பின் தலைவராக அறியப்பட்ட இரா. சம்பந்தன் ஒரு தோல்வியடைந்த தலைவர். அவரை முன்னிறுத்தி இனியும் கூட்டமைப்பால் பயணிக்க முடியுமா? கூட்டமைப்பு தொடர்ந்தும் சம்பந்தனின் தலைமைத்துவத்தின் கீழ் இருக்குமனால், கூட்டமைப்பின் அங்கத்து கட்சிகளின் தலைவர்களால், கூட்டமைப்புக்குள் புதிய மாற்றங்களை ஏற்படுத்த முடியுமா? புதிய மாற்றங்கள் ஏற்படாவிட்டால், கூட்டமைப்பின் எதிர்காலம்?

# பாராளுமன்றுக்குத் தெரிவானோர் 15ஆம் திகதிக்கு முன் பதிவு செய்க

*கொழும்பு, ஒக 12*

*பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டவர்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யுமாறு பாராளுமன்றம் அறிவித்துள்*
*ளது.*

*இந்தப் பதிவு நடவடிக்கைகள்* Online *மூலமாக முன்னெடுக்கப்படவுள்ளதாக பாராளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகம் நீல் இத்தவெல தெரிவித்துள்ளார்.*

*இதன்மூலம் உறுப்பினர்கள் பாராளுமன்றத்துக்கு வருகை தராது, தமது பெயரைப் பதிவு செய்து கொள்ள முடியும் என அவர் கூறியுள்ளார்.*

*தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களின் கல்வித் தகைமை, தொழில் தகைமை, நிழற்படம் மற்றும் சமயம் ஆகியன தொடர்பில் தகவல்கள் சேகரிக்கப்படவுள்ளன.*

www.parliament.lk *எனும் இணையத்தள முகவரி யினூடாக புதிய பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களை பதிவு செய்து கொள்ள முடியும் என பாராளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.*

# ஓ.எல்.பரீட்சைக்கு தோற்றும் 100,000 மாணவர் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கவில்லை

*கொழும்பு, ஒக 12*

*2020 க.பொ.த சாதாரணதர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களில் சுமார் 100,000 பேர் இதுவரை தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவில்லையென ஆட்பதிவுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.*

*இந்த வருடம் டிசெம்பர் மாதம் சாதாரணதரப் பரீட்சை நடைபெறவுள்ளது.*

*ஆண்டு தோறும் க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு தோற்ற 350,000 வரையான மாணவர்கள் விண்ணப்பிப்பது வழக்கம். இந்த வருடத்தில் இதுவரை 250,000 விண்ணப்பங்களே பெறப்பட்டுள்ளன.*

*பரீட்சைக்கு தோற்றவுள்ளவர்கள் ஒகஸ்ட் 31ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பிக்க கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.*

# இலங்கைத் தமிழும் தமிழரும் ஆய்வரங்கில் இன்று

*யாழ்ப்பாணம், ஒக 12*

*யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமும் தமிழ் நாடு மதுரை உலகத் தமிழ்ச்சங்கமும் இணைந்து சூம்* (Zoom) *செயலி வாயிலாக 20 நாள்கள் இலங்கையில் தமிழும் தமிழரும் என்ற பொருளில் இணையவழியில் ஆய்வு மாநாட்டை முன்னெடுத்து வருகின்றன.*

*இதன் பதின்மூன்றாவது நாளாகிய இன்று (12.08.2020 செவ்வாய்க்கிழமை) மாலை 4 மணி தொடக்கம் 5 மணி வரை யாழ்ப்பாணம் நாட்டிய கலாகேந்திராவின் இயக்குநர் கலாநிதி கிருசாந்தி இரவீந்திரா இலங்கைத் தமிழர் ஆடல் கலை மரபு என்ற பொருளில் ஆய்வுரை ஆற்றவுள்ளார்.*

*இணையவழியில் பங்கேற்க விரும்பும் ஆர்வலர்கள் பின்வரும் கடவுச்சொல்லைப் பயன்படுத்திக் கலந்து பயன்பெற முடியும் எனத் தமிழ்ச்சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.*

Zoom meeting ID : 477 159 8996
pass word : wts

# குளிரூட்டப்பட்ட அறைகளில் தீர்மானங்கள் எடுப்பதில்லை

## ஐக்கிய மக்கள் சக்தி குறித்து சஜித்

*கொழும்பு, ஒக. 12*

*ஐக்கிய மக்கள் சக்தியானது, இரண்டு - மூன்று பேர்களுடன் குளிரூட்டப்பட்ட அறைகளில் இருந்துகொண்டு நாட்டு மக்கள் தொடர்பில் தீர்மானங்களை எடுக்கும் கட்சியல்ல என்று அதன் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.*

*ஐக்கிய மக்கள் சக்தியின் எந்தவொரு தீர்மானமும் கலந்துரையாடல்கள் மூலம் அனைவரும் இணைந்து மேற்கொள்ளும் வழிமுறையை எந்நாளும் பின்பற்றும் என்றும் அவர் கூறினார்.*

*அத்துடன், தமது கட்சியில் இனம் - மதம் உள்ளிட்ட வேறுபாடுகளுக்கு இடமில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.*

*ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளர்களுடன் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது, அவர் இதனைத் தெரிவித்தார்.*

*மாகாண சபைத் தேர்தலுக்கு வெற்றிகரமாக முகங்கொடுக்க தற்போதிலிருந்து தயாராகி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



செய்திகள்

# சுதந்திரக் கட்சிக்கு மூன்று அமைச்சுகள்!

## பிள்ளையானுக்கும் பதவி

கொழும்பு, ஓக 12

புதிய அரசின் அமைச்ச ரவையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூன்று உறுப்பினர் கள் அங்கம் வகிக்கவுள்ளனர்.

கட்சித் தலைவரும், முன் னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன, நிமல் சிறிபாலடி சில்வா, மஹிந்த அமரவீர ஆகிய மூவருக்கே அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன், தயாசிறி ஜயசேகரவுக்கு இராஜாங்க அமைச்சு பதவியொன்று வழங்கப்படலாம் எனத் தெரியவருகின்றது.

அமைச்சர்களும், இராஜாங்க அமைச்சர்களும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் நாளை கண்டியில் பதவியேற்கவுள்ளனர்.

அதேவேளை, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் பிள்ளையானுக்கும் அமைச்சுப் பதவியொன்று வழங்கப்படவுள்ளது. இராஜாங்க அமைச்சு பதவியே வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பின் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலை தொடர்பில் குற்றம் சுமத்தப் பட்டு விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிள்ளை யான் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

இதேவேளை, பிள்ளையா னுக்கு சட்ட ரீதியாக அனுமதி வழங்கி அவரை கண்டியில் நடைபெறும் அமைச்சரவை பதவியேற்பில் பங்கேற்க செய் வது தொடர்பில் நேற்றுமுன் தினம் கொழும்பில் கலந்துரை யாடல்கள் இடம்பெற்றுள்ளன.

# தொம்பேயில் விபத்து; தாய், மகள் மரணம்!

கொழும்பு, ஓக 12

தொம்பே பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் தாய் மற்றும் மகள் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன் தினம் இடம்பெற்ற குறித்த சம்பவத்தில் தாயும் (வயது - 42) மகளும் (வயது -19) உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள் மீது கார் மோதியதில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளதாகப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

விபத்தில் பலத்த காயமடைந்த தாய் மற்றும் மகள் தொம்பே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்ததுள்ளனர் எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பாக காரின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் தொம்பே பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# லிந்துலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 24 குடியிருப்புகள் முற்றாக தீக்கிரை

கொழும்பு, ஓக 12

லிந்துலை பொலிஸ் பிரிவிற் குட்பட்ட பம்பரக்கலை மத்திய பிரிவில் நேற்று முன் தினம் இரவு 10 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தில் 24 தொழிலாளர் குடியிருப்புகள் முற்றாக தீக்கிரையாகியுள்ளன.

தீ விபத்து காரணமாக லயன் தொகுதியில் அமைந்தி ருந்த வீடுகள் முற்றாக சேதம டைந்ததுடன் இந்த வீடுகளில் குடியிருந்த 24 குடும்பங்களைச் சேர்ந்த 70 பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளனர்.

வீட்டில் இருந்தவர்கள் கூச்ச லிட்டதை அடுத்து அயலவர் கள் ஓடி வந்து தீயை அணைக்க முற்பட்டபோதும் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை. அதனைய டுத்து லிந்துலை பொலிஸார் மற்றும் பொதுமக்கள் இணைந்து தீயை கட்டுப்பாட் டிற்குள் கொண்டுவர நடவ டிக்கை எடுத்ததுடன், சுமார் 3 மணித்தியாலத்தின் பிறகு தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

தீ விபத்தில் எவ்வித உயிர் ஆபத்தோ, காயங்களோ ஏற் படாத போதிலும் உடைமை களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளன.

இந்த தீ விபத்து காரணமாக பலரது அத்தியாவசிய ஆவணங் கள் உடுதுணிகள், தளபாடங் கள் போன்றன சேதத்திற்கு உள்ளாகியுள்ளன.

விபத்தினால் பாதிக்கப் பட்ட 24 குடும்பங்களைச் சேர்ந்த 70 பேர் தற்காலிகமாக தோட்ட சிறுவர் பராமரிப்பு நிலையம், உறவினர் மற்றும் அயலவர்களின் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

# போதைப்பொருள் பொதி செய்த ஐந்து பேர் பொலிஸாரால் கைது!

கொழும்பு, ஓக 12

ஹெரோயின் போதைப் பொருளை பொதி செய்து கொண்டிருந்த ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் எல் லைக்குட்பட்ட நிந்தவூர் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் சட்டவிரோதமாக ஹெரோயின் போதைப்பொருள்களை பொதி செய்து கொண்டிருப்பதாக சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.டி.எச். ஜயலத்துக்கு இரகசியத் தகவல் கிடைக்கப் பெற்றிருந்தது.

இதற்கமைய சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரியின் வழிகாட்டலுக் கமைய சம்மாந்துறை பொலிஸ் நிலையக் குற்றப்புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி விஜயராஜா தலைமையிலான உப பொலிஸ் பரிசோதகர் ஜனோசன் குழுவினர் மேற்கொண்ட அதிரடி நட வடிக்கை காரணமாக போதைப் பொருளை பொதி செய்த நிலையில் ஐவர் கைதாகினர்.

இவ்வாறு கைதானவர்கள் 25 வயது முதல் 30 வயதுடைய வர்கள் எனவும் சுமார் 1 கிரா முக்கு அதிகமான பொதி செய் யப்பட்ட போதைப்பொருள் பைக்கெற்றுக்களும் மீட்கப் பட்டுள்ளதுடன் இந்தப் போதைப்பொருளை பன டோல் மாத்திரையுடன் கலந்து பொதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருவதாகப் பொலிஸார் குறிப்பிட்டார்.

# 43 பேர் நாடு திரும்பினர்!

கொழும்பு, ஓக 12

கட்டாரில் சிக்கியிருந்த இலங்கையர்கள் 43 பேர் நேற் றுக் காலை நாடு திரும்பியுள் ளனர்.

அனைவரும் விமான நிலை யத்தில் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, தனி மைப்படுத்தல் மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதேவேளை, நேற்று முன் தினம் 27 பேர் கொரோனா தொற்றுடன் கண்டறியப்பட் டனர். தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 2,871 ஆக உயர்ந்துள்ளது.

சேனபுர புனர்வாழ்வு மையத்தின் 23 கைதிகளும், ஐக்கிய அரபு எமிரேட்ஸில் இருந்து நாடு திரும்பிய நான்கு பேருமே தொற்றுடன் அடை யாளம் காணப்பட்டனர்.

# ராஜபக்ஷ குடும்பத்துக்குள் பிரதி சபாநாயகர் பதவி!

கொழும்பு, ஓக 12

9ஆவது பாராளுமன்றத்தின் பிரதிச் சபாநாயகராக சசீந்திர ராஜபக்ஷ நியமிக்கப்படவுள் ளார் என அரசியல் வட்டாரங் களில் இருந்து அறியமுடிகின் றது.

பொதுத்தேர்தலில் மொன ராகலை மாவட்டத்தில் போட்டியிட்ட சசீந்திர ராஜபக்ஷ அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றார்.

8ஆவது பாராளுமன்றத்தின் சபாநாயகராகச்செயற்பட்ட சமல் ராஜபக்ஷவின் மகனே இவர்.

அதேவேளை, புதிய பாராளு மன்றத்தின் சபாநாயகராக மஹிந்த யாப்பா அபேவர்தன நியமிக்கப்படவுள்ளார் எனத் தெரியவருகின்றது.

# உழவு இயந்திரம் விபத்து 8 வயது சிறுமி உயிரிழப்பு!

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆலங்குளம் வீதியில் இடம்பெற்ற உழவு இயந்திரம் விபத்துக்குள்ளானதில் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன் தினம் மாலை 5.45 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

உழவு இயந்திரம் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் உழவு இயந்திர ஓட்டுநர் மற்றும் அதில் பயணித்த சிறுமிகள் இருவர் காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் 8 வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் அக்கரைப்பற்று பொலிஸ ார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சுரேன் ராகவன் இப்போது கனேடியப் பிரஜை அல்லர்!



கொழும்பு, ஓக 12

சிறிலங்கா பொதுஜன பெர முனவின் தேசியப் பட்டியல் உறுப்பினராக அறிவிக்கப்பட் டுள்ள வடக்கு மாகாண முன் னாள் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் கனடிய குடி யுரிமையை துறந்துவிட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா பொதுஜன பெர முனவின் தேசியப் பட்டியலில் கலாநிதி சுரேன் ராகவனின் பெயர் இடம்பெற்றிருந்த நிலை யில், அதற்கு எதிர்ப்புத் தெரி வித்து, சிவில் செயற்பாட்டா ளர் ஒருவரால் தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

கனடா மற்றும் இலங்கை குடியுரிமைகளைக் கொண்ட அவர் நாடாளுமன்றம் செல்ல முடியாது என்றும் அவரைத் தேசியப் பட்டியல் உறுப் பினராக நியமிப்பது சட்ட விரோதம் என்றும் எதிர்ப்பு வெளியிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில், சுரேன் ராகவன் ஏற்கனவே கனேடி யக் குடியுரிமையை இழந்து விட்டார் என்பதை கனேடிய அரசு உறுதிப்படுத்தியுள்ளது.

2020 ஆம் ஆண்டு ஜூன் 4ஆம் திகதியுடன் சுரேன் ராகவன் கனேடிய குடியுரி மையை கைவிட்டுவிட்டார் என்றும் அவர் இப்போது கனேடிய பிரஜை அல்ல என்றும் கனேடிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

# ஓகஸ்ட் 15 ஆம் திகதி முதல் கைதிகளைப் பார்க்க வசதி

கொழும்பு, ஓக 12

ஓகஸ்ட் 15 ஆம் திகதி முதல் கைதிகளைப் பார்வையிடுவ தற்கு பார்வையாளர்களை அனுமதிக்க சிறைச்சாலைத் திணைக்களம் முடிவு செய் துள்ளது.

அதன்படி கடுமையான சுகா தார வழிகாட்டல்கள் மற்றும் நிபந்தனைகளின் கீழ், கைதி களின் நெருங்கிய உறவினருக்கு மாத்திரமே கைதிகளைப் பார்வையிட அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

ஒரு கைதியைப் பார்வையிடு வதற்கு வாரத்திற்கு ஒரு முறை மட்டுமே உறவினர் அனுமதிக்கப்படுவர்.

உறவினர்கள் கைதிகளுக்கு உணவு மற்றும் பானங்களை வழங்க முடியாது. அதே நேரத் தில் சுகாதாரப் பொருட்களை மட்டும் வழங்க முடியும்.

கடந்த மாதம் வெலிக் கடைச் சிறைச்சாலை கைதி ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டதை அடுத்து வெலிக்கடைச் சிறைச் சாலையிலுள்ள கைதிகளை பார்வையிடுவதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

அதன் பின்னர் ஏனைய சிறைச்சாலைகளிலும் இந்த நெருக்கடி நிலைமை ஏற்பட வாய்ப்புள்ளதாக கருதி நாட ளாவிய ரீதியில் கைதிகளைப் பார்வையிடும் நடவடிக்கை மறு அறிவித்தல் வரை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

# 19 ஆவது திருத்தம் நிச்சயம் நீக்கப்படும்

## பஸில் ராஜபக்ஷ திட்டவட்டம்



கொழும்பு, ஒக 12

அரசமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டம் நிச்சயம் நீக்கப்படும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

புதியதொரு அரசமைப்பை உருவாக்குவதற்கு நாட்டு மக்கள் ஆணை வழங்கியுள்ளனர். அதனை இயற்றுவதற்கு முன்னர் நிச்சயம் 19 ஐ நீக்குவோம். அதன்பின்னர் மக்களின் ஒத்துழைப்புடன் நாட்டுக்கு தேவையான அரசமைப்பு உருவாக்கப்படும்.

எமது அரசு மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கை வீணடிக்கப்படமாட்டாது. வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும். கடந்தகாலத் தவறுகளைத் திருத்திக்கொண்டு முன்நோக்கிப் பயணிப்போம். நாட்டை கட்டியழுப்புவதே எமது பிரதான நோக்கம். இதில் அனைவரும் இலங்கையராக இணையவேண்டும்-என்றார்.

# துப்பாக்கி, வாள்களுடன் அராலியில் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக 12

அராலிப் பகுதியில் துப்பாக்கி மற்றும் வாள்களுடன் இருவர் கைது செய்யப்பட்டு வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

அராலிப் பகுதியில் உள்ள இளைஞர் குழு ஒன்றிடம் துப்பாக்கி மற்றும் வாள்கள் உள்ளன என வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் அந்த இளைஞர்கள் குழு வசிக்கும் பகுதியில் நேற்று முன்தினம் தேடுதல் நடத்தியுள்ளனர்.

அதன் போது உள்ளூர் தயாரிப்பு (கட்டுத்துவக்கு) துப்பாக்கி ஒன்றும் வாள் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் இரு இளைஞர்களை பொலிஸார் கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இரு இளைஞர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் மேலும் 8 இளைஞர்களை பொலிஸார் கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் அவர்களிடம் வாக்கு மூலங்களை பெற்று அவர்களை விடுவித்துள்ளனர்.

இதேவேளை முன்னதாக கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



## 18மான் கொம்புகள் மீட்பு!

கொழும்பு, ஒக 12

நுவரெலியாவிலுள்ள ஒரு சுற்றுலா விடுதியில் இருந்து 18 மான் கொம்புகள், இரண்டு எருமைத் தலைகள், வண்ணத் துப்பூச்சிகள் மற்றும் ஒரு மலைப் பாம்பு ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

வனவிலங்கு அலுவலகம் பெற்ற உதவிக்குறிப்பின் பேரில் இந்த சோதனை நடத்தப்பட்டதாகவும், விலங்குகளின் பாகங்களுடன் விடுதியின் மேலாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நேற்று நுவரெலியா நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.



# ஐக்கிய தேசியக் கட்சிக்கு புதிய தலைமை அவசியம்

## கட்சிக் கூட்டத்தில் கூறிய ரணில்

கொழும்பு, ஒக 12

ஐக்கிய தேசிய கட்சிக்குப் புதிய தலைமைத்துவம் அவசியமென கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெளிவாக எடுத்துரைத்துள்ளார் என அந்தக் கட்சி நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் செயற்குழு உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின்போது, கட்சித் தலைவர் இதனைக் கூறினார் என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

புதிய தலைமைத்துவம் தொடர்பில் கலந்துரையாடி அடுத்த செயற்குழு கூட்டத்தில் அறிவிக்கவேண்டும் எனவும் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

கட்சியை முழுமையாக மறுசீரமைத்து வெற்றிப்பாதைக்கு கொண்டு செல்வதற்கான திட்டமொன்று வகுக்கப்படவேண்டும் எனவும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க இந்தக் கலந்துரையாடலில் சுட்டிக்காட்டினார் எனக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இலங்கையுடன் உறவை வலுப்படுத்த சீனா தயார்

கொழும்பு, ஒக 12

இரு தரப்பினருக்கும் பயனளிக்கும் வகையில் இலங்கையுடனான பாரம்பரிய உறவுகளை வலுப்படுத்தத் தயாராக உள்ளதாக சீனா தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், சீன அரச செய்தித் தொடர்பாளர் ஜாவோ லிஜியென் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டதற்கு சீனா வாழ்த்து தெரிவித்ததுடன் சீனப் பிரதமரும் தனது வாழ்த்துச் செய்தியை அனுப்பியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் 28ஆவது பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ நேற்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். இந்நிலையில் அவருக்கு ஏனைய நாடுகள் தொடர்ந்து வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# 118 பேர் விடுவிப்பு!

கொழும்பு, ஒக 12

கட்டாயத் தனிமைப்படுத்தல் நடவடிக்கையை நிறைவு செய்த மேலும் 118 பேர் நேற்று தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்து, அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி கல்கந்தை தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து 112 பேரும் மீயாங்குளம் தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து நால்வரும் புனானை தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து இருவரும் நேற்று தமது வீடுகளுக்குச் சென்றனர்.

தனிமைப்படுத்தல் நிலையங்களில் இருந்து இதுவரை 29 ஆயிரத்து 757 பேர் தனிமைப்படுத்தல் காலத்தை வெற்றிகரமாக நிறைவு செய்து வெளியேறியுள்ளனர்.

# மாலக சில்வாவை தேடும் பொலிஸார்

கொழும்பு, ஒக 12

பத்தரமுல்லவை சேர்ந்த ஒரு தொழிலதிபருக்கு மரண அச்சுறுத்தல் விடுத்த குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக சில்வாவை கைது செய்ய சிறப்பு பொலிஸ் குழு நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

மாலக சில்வாவை கைது செய்ய தலங்கம பொலிஸ் அதிகாரிகள் குழு நேற்று முன்தினம் நுகேகொடையில் உள்ள முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவின் இல்லத்துக்குச் சென்றனர்.

இருப்பினும், மேர்வின் சில்வா மற்றும் அவரது மகன் மாலக சில்வா ஆகியோர் அந்த நேரத்தில் வீட்டில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

மேர்வின் சில்வாவின் தேர்தல் பிரசாரத்துக்கு நிதியளிக்குமாறு வற்புறுத்தி பத்தரமுல்லயைச் சேர்ந்த ஒரு தொழிலதிபருக்கு மரண அச்சுறுத்தல் விடுத்த குற்றச்சாட்டில் மாலக்க சில்வாவை கைது செய்ய பொலிஸ் அதிகாரிகள் நடவடிக்கையெடுத்துள்ளனர்.

பத்தரமுல்லையில் வசிக்கும் மீன் வர்த்தகர் ஒருவரிடம் ஆரம்பத்தில் மாலக சில்வா தேர்தலுக்காக 100,000 ரூபா நிதி கோரியுள்ளார். கொரோனா தொற்றுநோயால் தனது வணிகம் நட்டத்தில் இயங்குவதாகவும், உரிய நேரத்தில் நிதி வழங்குவதாகவும் தொழிலதிபர் மாலக சில்வாவுக்கு தெரிவித்திருந்தார்.

மாலக சில்வா பின்னர் எஸ். எம்.எஸ் மற்றும் வாட்ஸ் அப் வழியாக தொழிலதிபரிடம் தொடர்ந்து நிதி கோரினார் எனக் கூறப்படுகிறது. இறுதியில் அவரை அச்சுறுத்தியுள்ளார். கோபமடைந்த மாலக சில்வா ஜூன் 15 அன்று தொழிலதிபருடன் தொலைபேசி அழைப்பு மூலம் மரண அச்சுறுத்தல் விடுத்தார் எனக் கூறப்படுகிறது.

இது தொடர்பாக தொழிலதிபர் ஜூன் 16 அன்று தலங்கம பொலிஸில் முறைப்பாடு அளித்தார்.

முறைப்பாடு குறித்து தலங்கம பொலிஸ் விசாரணையைத் தொடங்கியதோடு, மாலக சில்வாவைக் கைது செய்ய தனிக் குழுவையும் நியமித்துள்ளது.

# முல்லை வைத்தியர்கள் நேற்று வேலைநிறுத்தம்

முல்லைத்தீவு, ஒக 12

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை வைத்தியர்கள் நேற்று வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வைத்தியர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதால் நோயாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றதை அடுத்து பல மாத காலமாக வைத்தியர் நியமிக்கப்படாத நிலையில் பொது மக்களாலும் வைத்திய அதிகாரிகளினாலும் பல தடவைகள் மேல்மட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாத நிலையில் நேற்று மாவட்ட வைத்தியசாலையின் வைத்தியர் சங்கத்தினர் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுப்பட்டுள்ளனர்.

இதனால் அவசரசிகிச்சை பிரிவு, குழந்தைகளுக்கான மருத்துவ சேவைகள் இடம்பெற்றதோடு ஏனைய எந்த மருத்துவ சேவைகளும் வைத்தியசாலையில் இடம்பெறவில்லை.

நேற்று கிளினிக் மருத்துவ சேவை இருந்த நிலையிலும் எந்த நோயாளர்களையும் வைத்தியர்கள் பார்வையிடாதமையால் தூர இடங்களில் இருந்து வருகை தந்த நோயாளர்கள் ஏமாற்றத்துடன் வீடுகளுக்குச் சென்றதைக் காணமுடிந்தது.

செய்திகள்

# இணையம் ஊடாக உறுப்புரிமையை முதன் முதலில் பதிவு செய்த மஹிந்த

இலங்கையின் நாடாளு மன்ற வரலாற்றில் முதல்முறை யாக அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்லைன் பதிவு முறை மூலம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது தனிப்பட்ட விவரங்களை நாடாளுமன்றச் செயலகத்தில் சமர்ப்பித்துள்ளார்.

புதிதாக தேர்ந்தெடுக்கப் பட்ட எம்.பி.க்கள் தங்கள் தனிப் பட்ட விவரங்களை நாடாளு மன்ற செயலகத்தில் சமர்ப்பிக்க ஒன்லைன் பதிவு முறையை அறிமுகப்படுத்தியுள்ளதாக நாடாளுமன்றம் நேற்று முன் தினம் அறிவித்தது. இந்த மாதம் 20 ஆம் திகதி வரை பதிவு நடைபெறும்.

ஒன்பதாவது நாடாளுமன்றத் தின் தொடக்க அமர்வு ஓகஸ்ட் 20 ஆம் திகதி நடைபெறும்.



# மக்கள் முன்னணியினர் யாழ். ஆயருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஓக 12

தமிழ்த் தேசிய மக்கள் முன் னணியினர் மதத் தலைவர் களைச் சந்தித்து ஆசிர்வாதம் பெற்று வருகின்றனர்.

முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம் பலம் தலைமையிலான குழு வினர் யாழ். ஆயர் ஜஸ்ரின் பேர்னாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையைச் சந்தித்து ஆசி பெற்றுள்ளனர்.

யாழ். ஆயர் இல்லத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் ஆயரிடம் ஆசி பெற்றுக்கொண்ட முன் னணியினர், சமகால மற்றும் எதிர்கால அரசியல் நிலைமை கள் குறித்தும் கலந்துரையாடி னர்.

இந்தச் சந்திப்பில் பாராளு மன்ற உறுப்பினரான செல்வ ராசா கஜேந்திரன், கட்சியின் சட்ட ஆலோசகர்களான கனக ரட்னம் சுகாஷ், நடராஜர் காண் டீபன் மற்றும் கட்சியின் உறுப் பினர்கள் கலந்து கொண்டனர்.

இதேவேளை நேற்று முன் தினம் நல்லை ஆதீனத்துக்குச் சென்ற முன்னணியின் குழு வினர் நல்லை ஆதீன முதல் வரைச் சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டனர்.

# குருநாகல் மேயர் ரிட் மனு தாக்கல்

கொழும்பு, ஓக 12

தனக்கு எதிராக குருநாகல் நீதவான் நீதிமன்றால் வெளியி டப்பட்டுள்ள பிடியாணை உத்தரவை இரத்துச் செய்து உத்தரவொன்றை வெளியிடு மாறு கோரி குருநாகல் மேயர் துஷார சஞ்ஜீவ விதாரண மேன்முறையீட்டு நீதிமன்றில் ரிட் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

# விபத்தில் முதியவர் மரணம்!

வவுனியா, ஓக 12

வவுனியாவில் நேற்று பிற் பகல் இடம்பெற்ற விபத்தில் முதியவர் பரிதாபகரமாக மரண மடைந்துள்ளார்.

இந்த முதியவர் வவுனியா புதிய பஸ் நிலையப் பகுதிக்குச் சென்றுள்ளார்.

இதன்போது அங்கு தரித்து நின்ற இலங்கை போக்குவரத் துச் சபையின் மாகோ சாலைக் குச் சொந்தமான பஸ் பின் நோக்கி செலுத்தப்பட்டது. இதன்போது பஸ்ஸின் பின் பகுதியில் நின்ற முதியவரை மோதித் தள்ளியது.

விபத்தில் படுகாயமடைந்த முதியவர் ஓட்டோவில் ஏற்றப்பட்டு வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். எனினும் அவர்சிகிச்சை பலனின்றி மரணமானார்.



# முல்லைத்தீவில் இருந்து மடுவுக்கு பாதயாத்திரை

முல்லைத்தீவு, ஓக 11

புனித தலமாகிய மடு திருத் தலத்துக்கு முல்லைத்தீவில் இருந்து பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் பாதயாத்திரை மேற் கொள்கின்றனர்.

மடு அன்னையின் திருத்தலத் தில் இடம்பெறவுள்ள திருவிழா வுக்காக வருடாவருடம் பல் வேறு நேர்த்திக்கடன்களை வைத்து பக்தர்கள் பாதயாத் திரை செல்வது வழமை.

இந்நிலையில் நேற்றுக் காலை முதல் ஒட்டுசுட்டான்- மாங்குளம் வீதி வழியாக பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் மடு திருத்தலத்துக்கு பாதயாத்திரையாக சென்றனர்.

வரலாற்று சிறப்புமிக்க கிறிஸ்தவர்களது புனித தலமாகிய மடு திருத்தலத்தில் எதிர்வரும் 15ஆம் திகதி திருவிழா இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரஷ்ய நாட்டு பிரஜை மன்னாரில் கைது!

மன்னார், ஓக 12

தலைமன்னார் பொலிஸ்பிரி வுக்கு உட்பட்ட பகுதியில் காலாவதியான விசாவுடன் சட்ட விரோதமாக தங்கியி ருந்த ரஷ்யா நாட்டுப் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டு தலைமன்னார் பொலிஸ் நிலை யத்தில் தனிமைப்படுத்தப் பட்டுள்ளார்.

தலைமன்னார் கடற்படை யினரால் இந்த நபர் கைது செய்யப்பட்டு தலைமன்னார் பொலிஸாரிடம் நேற்று முன் தினம் திங்கட்கிழமை கைய ளிக்கப்பட்டார்.

தலைமன்னார் பொலிஸார் விசாரணைகளின் பின்னர் நேற்று முன் தினம் திங்கட் கிழமை மாலை மன்னார் பதில் நீதிவான் இ.கயஸ் பெல்டானோ முன்னிலையில் ரஷ்யப் பிரஜையை ஆஜர்ப் படுத்தினர்.

அவர் சார்பாக சட்டத்தரணி டினேஸன் முன்னிலையானார்.

விசாரணைகளை மேற் கொண்ட பதில் நீதவான் அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

இந்த ரஷ்ய பிரஜைக்கு "கொரோனா" தொற்று இருக்கலாம் என்ற சந்தேகத் தின் பெயரில் அவர் தலை மன்னார் பொலிஸாரின் பாது காப்பில் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டுள்ளார்.

அவருக்கான பி.சி.ஆர் பரி சோதனை அறிக்கை கிடைக்க பெற்ற பின்னர் மேலதிக நட வடிக்கை மேற்கொள்ளப்பட வுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேர்தலில் டக்ளஸ் வெற்றி அம்பாறையில் வழிபாடு



நிந்தவூர், ஓக 11

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றதையொட்டியும், அவ ரது எதிர்கால அரசியல் பயணம் மிகச் சிறப்புற அமையவும் இறை ஆசி வேண்டியும் அம் பாறையில் விசேட பூசை வழிபாடு ஒன்று இடம் பெற்றது.

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் உட்பட அதன் இணை நிறுவனங்களான அகில இலங்கை மக்கள் ஜன நாயகக் கட்சி, வடகிழக்கு மாகாண ஜீவோதய நலன்புரி அமைப்பு, சிறிலங்கா அரச சேவை மற்றும் மாகாண அரச சேவை தொழிற் சங்கம் மேளனம் என்பவற்றின் ஏற் பாட்டில் இந்த பூசை வழிபாடு இடம் பெற்றது.

சங்கத் தலைவரும், தொழிற் சங்கவாதியுமான எஸ்.லோக நாதன் தலைமையில், அம்பாறை ஸ்ரீமாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் இந்த பூசை வழி பாடு இடம் பெற்றது.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ க.கு.நகுலேஸ்வர குருக்கள் இந்த சிறப்பு பூசை வழிபாட்டை நடத்தினார்.

சங்க ஆலோசகர்களான செ. பேரின்பராசா, நவரட்ண சமர துங்க, உப தலைவர் ஜி. மணி வேல், தேசிய அமைப்பாளர் ஐ.எம்.இப்றாலெவ்வை, உப செயலாளர் கே.ஜெகதீஸ்வரன் உட்பட உறுப்பினர்கள் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இம்முறை பொதுத்தேர்த லில் அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கமும் அதன் இணை நிறுவனங்களும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியு டன் (ஈ.பி.டி.பி) இணைந்து ஆதரவளித்தமை குறிப்பிடத்தக் கது.

# முன்னாள் போராளி மீது கொலைவெறி தாக்குதல்!

வவுனியா, ஓக 12

வவுனியாவில் இனந்தெரி யாத நபர்கள் நேற்றுமுன்தினம் இரவு தாக்குதல் நடத்தியதில் முன்னாள் போராளியொருவர் படுகாயமடைந்து வவுனியா பொது வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் போராளியும், சமூக சேவகரும், தமிழ் நிலம் மக்கள் அமைப்பின் தலைவரு மான வி.விநோதரன் என்பவர் மீதே இனந்தெரியாத நபர் களால் தாக்குதல் மேற்கொள் ளப்பட்டுள்ளது.

வவுனியா கரப்பன்காட்டுப் பகுதியில் அமைந்துள்ள தமிழர் நிலம் மக்கள் அமைப்பின் அலுவலகத்துக்குள் நேற்று முன் தினம் இரவு உட்புகுந்த மர்மநபர்கள் முன்னாள் போராளி மீது சரமாரியாக தாக்குதல் நடத்தியுடன் அலுவ லகத்தில் இருந்த 50ஆயிரம் ரூபா பணத்தையும் கொள்ளை யிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

முன்னாள் போராளி மீதான தாக்குதல் தொடர்பாக அயல வர்களால் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதுடன், அம்புலன்ஸ் மூலம் படுகாய மடைந்த நபர் வவுனியா வைத் தியசாலையில் அனுமதிக்கப் பட்டார்.

வவுனியாவில் தாக்குதலுக் குள்ளான முன்னாள் போராளி வன்னி மற்றும் யாழ்ப்பாணம் பகுதிகளில் முன்னாள் போராளி கள், மாவீரர் குடும்பங்கள், பல்கலைக்கழக மாணவர் களுக்கு தமிழ் நிலம் மக்கள் அமைப்பின் ஊடாக மனிதா பிமான சேவைகள் செய்து வரு கின்றமை குறிப்பிடத்தக்கது.



# ஒருவர் வெட்டிக் கொலை

கொழும்பு, ஓக 12

வயல்வெளிக்கு அருகில் கூரிய ஆயுதத்தால் ஒருவர்வெட் டிக் கொலை செய்யப்பட்டுள் ளார்.

இந்தச் சம்பவம் நிட்டம்புவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எகொடஉவத்த, போகொடகம, தொரகடவெல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

நிட்டம்புவ, யட்டியன பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயது டைய இளைஞரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலைச் சந்தேகநபரைக் கைது செய்வதற்கான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

செய்திகள்

# மாகாண தேர்தலை குறிவைத்து மலையகத்தில் புதிய கூட்டணி!

கொழும்பு, ஒக 12

மலையகத்தில் விரைவில் இளைஞர்களின் பங்களிப்புடன் புதியதொரு அரசியல் கூட்டணி உதயமாகவுள்ளது என நம்பகர மான அரசியல் வட்டாரங் களில் இருந்து அறியமுடிகின்றது.

இதற்கான பேச்சுகள் தற் போது திரைமறைவில் இடம் பெற்றுவருகின்றன எனவும், முக்கிய மூன்று அரசியல் புள்ளிகள் பச்சைக்கொடி காட்டும்பட்சத்தில் ஒக்ரோபர் ஆரம்பத்தில் கூட்டணி தொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும் எனவும் தெரியவருகின்றது.

நுவரெலியா, பதுளை, கண்டி, கேகாலை, இரத்தின புரி மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களை மையப்படுத்தியே புதிய கூட்டணியின் அரசியல் பயணம் அமையுமெனவும், பேச்சு வெற்றியளித்து கூட்டணி உதயமானால் மாகாணசபைத் தேர்தலில் புதிய கூட்டணி போட்டி யிடும் என எதிர்பார்க் கப்படுகின்றது.

புதிய கூட்டணி பதிவு செய்யப்படும்வரை, தேர்தல் விவகாரங்களுக்காக பதிவு செய்யப்பட்ட கட்சியொன்றை கூட்டணிக்கு வழங்குவதற்கு அரசியல் பிரமுகரொருவர் தயார் நிலையிலேயே இருப்பதாகவும், அடுத்த வாரமளவில் சந்திப்பொன்று நடைபெறவுள்ளது எனவும் தெரியவருகின்றது.



# பிரதமரின் செயலாளர் கடமைகளை ஏற்றார்

கொழும்பு, ஒக 12

பிரதமரின் புதிய செயலாளர் காமினி செனரத் நேற்று செவ் வாய்க்கிழமை முற்பகல் அலரி மாளிகை யில் கடமைகளை பொறுப் பேற்றார்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக சேவையாற்றிய காலப்பகுதியில் காமினி செனரத் செனரத், அவரது மேலதிக செயலாளராகவும், தலைமை அதிகாரியாகவும் கடந்த 2005ஆம் ஆண்டு முதல் 2015 வரை பணியாற்றியதுடன், 2004ஆம் ஆண்டு மஹிந்த பிரதமராக சேவையாற்றிய காலப்பகுதியில் பிரதமரின் மேலதிக செயலாளராகவும் பணியாற்றியிருந்தார்.

இலங்கை நிர்வாக சேவையின் சிரேஷ்ட அதிகாரி களில் ஒருவ ரான அவர், களனி பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவராவார்.

# தனது மகனை தேடிவந்த மற்றுமொரு தாயார் சாவு

முல்லைத்தீவு, ஒக 12

முல்லைத்தீவு மாவட் டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த மற்றுமொரு தாயார் நேற்று முன் தினம் உயிரிழந் துள்ளார்.

முல்லைத்தீவு மாணிக்கபுரம் விசுவமடுப் பகுதியைச் சேர்ந்த 74 வயதுடைய மைக்கல் ஜேசு மேரி எனும் தாயாரே இவ்வாறு உயிரிழந் துள்ளார்.

கடந்த 2009 ஆம் ஆண்டு மாத்தளன் பகுதியில் தனது மகனான மைக்கல் ஜோசப் என்பவர் காணாமலாக்கப்பட்ட நிலையில் தன்னுடைய மகனை தேடி தொடர்ச்சியாக முல்லைத் தீவில் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த நிலையில் இவர் நேற்று சுகயீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவில் இந்த தாயாருடன் தமது உறவுகளை தேடிவந்த 18 உறவுகள் உயிரி ழந்த நிலையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# குற்றச்செயல்கள் அறிவிக்கும் இலக்கத்துக்கு அதிக அழைப்பு

கொழும்பு, ஒக 2

குற்றச்செயல்கள் தொடர் பான தகவல்களை தெரிவிப்ப தற்காக அறிமுகப்படுத்தப்பட்ட விசேட தொலைபேசி இலக்கத் திற்கு கடந்த 2 வார காலப்பகு தியில் 1527 க்கும் 1263 க்கும் இடைப்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளமை விசேட அம்சமாகும் என்று பொலிஸ் ஊடக பேச்சாளரும் சிரேஸ்ட பொலிஸ் அத்தியகட்சகருமாக ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் நடைபெற்ற விசேட ஊடகவிய லாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

1997 என்ற தொலைபேசி இலக் கத்துக்கு பாரிய அளவிலான திட்டமிட்ட ஊழல் குற்றச் செயல் குழுக்களின் செயற்பாடுகள் மற்றும் கப்பம் பெறுதல் போன்ற தகவல்கள் கிடைத்திருப்பதாகவும் அவர் கூறினார். தேசிய பாதுகாப் புக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடிய செயற்பாடுகள் குறித்தும் தெரிவிக்க முடியும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.



# அங்கஜன் வரலாற்று வெற்றி

## மைத்திரி புகழாரம்

கொழும்பு, ஒக 12

நிறைவடைந்த பொதுத்தேர் தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் யாழ்ப்பா ணத்தில் போட்டியிட்டு, மாபெரும் வெற்றியைப் பதிவு செய்த நாடாளுமன்ற உறுப்பி னர் அங்கஜன் இராமநாதனின் வெற்றி சிறந்த வரலாற்று வெற்றி என முன்னாள் ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொதுத்தேர்தல் வெற்றி தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ்விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அந்த வாழ்த்துச் செய்தி யில்-

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் கைச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனுக்கு யாழ்.மாவட்ட மக்கள் மிகச் சிறந்த வரலாற்று வெற்றியைப் பெற்றுக் கொடுத்துள்ளார்கள்.

இந்த வெற்றியைப் பெற்றுக் கொடுத்த யாழ்.மாவட்ட மக்களுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் தனது நன்றி களை தெரிவித்துக்கொள் கின்றேன்-என்றுள்ளது.

# யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பட்டமளிப்பு ஒக்ரோபரில்

யாழ்ப்பாண பல்கலைக் கழக 35 ஆவது பொதுப்பட்ட மளிப்பு விழாவின் முதலாவது பகுதி எதிர்வரும் ஒக்ரோபர் 6ஆம், 7ஆம், 8ஆம் திகதி களில் நடத்துவதற்குத் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் வேந் தர் பேராசிரியர் எஸ்.பத்ம நாதன் தலைமையில் இந்தப் பட்டமளிப்பு விழா நடை பெறவுள்ளது.

கொரோனா தொற்றுப் பரவலைக் கருத்தில் கொண்டு, சுகாதார அமைச்சின் நடை முறைகளைப் பின்பற்றி, சமூக இடைவெளி பேணப்பட்டு இந்தப் பட்டமளிப்பு விழாவை நடாத்துவது பற்றி பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழா குழுவினர் விரைவில் கூடி ஆராயவுள்ளனர்.

# யாழ். சிறைச்சாலையில் தடுப்பில் இருந்தவர் சாவு



யாழ்ப்பாணம், ஒக 12

கடந்த ஜூலை மாதம் 11ஆம் திகதி சட்டவிரோதமாக கடல்வழியாக இலங்கை திரும் பியவர்கள் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்துவைக் கப்பட்டிருந்த நிலையில் அவர் களில் ஒருவர் உயிரிழந்துள் ளார்.

காங்கேசன்துறை கடற்பரப் பில் படகு ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்த நால்வர் கடற் படையினரால் கைது செய்யப் பட்டு யாழ்.சிறைச்சாலையில் தனிமைப்படுத்தலுக்காக தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களின் தனிமைப்படுத் தல் காலத்தில் அவர்களிடம் இரண்டு தடவைகள் மேற் கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோனையில் அவர்களுக்கு தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இருந்தபோதிலும் சட்ட விரோதமாக அவர்கள் பயணித்தமையால் அவர்களைத் தொடர்ந்தும் சிறைச்சாலை யில் தடுத்துவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந் தது.

அவர்களில் முரளி என்ற நபர் பல்வேறு நோய்த் தாக்கங் களுக்கு உள்ளாகியிருந்த நிலை யில் கடந்த மூன்று நாட்க ளாக யாழ்.போதனா வைத்திய சாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டி ருந்தார். அவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந் துள்ளார்.

# ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து திரும்பிய நால்வருக்கு கொரோனா

கொழும்பு, ஒக 12

ஐக்கிய இராச்சியத்தில் இருந்து நாடு திரும்பிய நால்வ ருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள் ளது.

இதனையடுத்து இலங்கை யில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2875 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றுக்கு இலக்கான நிலையில் சிகிச்சை பெற்று வந்தவர்களில் நேற்று 29 பேர் பூரணமாக குணமடைந்து வெளியேறியுள்ளதை அடுத்து இதுவரை பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 2622 ஆக உயர்வடைந்துள்ளது.

வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
ஈழநாடு
Eelanadu

# 27 முன்னாள் எம்.பிக்கள் ஓய்வூதியம் இழந்தனர்!

கொழும்பு, ஒக 12

இலங்கையின் 08ஆவது நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த 27 பேர் ஓய்வூதியம் கிடைக்கும் வாய்ப்பை இழந்துள்ளனர்.

2015ஆம் ஆண்டு முதற்தடவையாக நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களே இவ்வாய்ப்பை இழந்துள்ளனர்.

நாடாளுமன்றத்தில் 5 வருடங்களை நிறைவு செய்யும் உறுப்பினர்கள் நாடாளுமன்ற ஓய்வூதிய திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெற தகுதி பெறுவார்கள். ஆயினும், இம்முறை நாடாளுமன்றம் நான்கரை வருடத்தில் கலைக்கப்பட்டதோடு, மீண்டும் குறித்த 27 பேரும் நாடாளுமன்றத்திற்கு தெரிவாகாத நிலையில், அவர்கள் ஓய்வூதியம் பெறும் வாய்ப்பை இழந்துள்ளனர்.

அவர்களது பெயர் விவரம் வருமாறு:

ஐக்கிய தேசிய முன்னணி
மலிக் சமரவிக்ரம
ஹிருணிகா பிரேமச்சந்திர
சத்துர சேனாரத்ன
ஆனந்த அலுத்கமகே
பந்து லால் பண்டாரிகொட
சந்திம கமகே
கருணாரத்ன பரணவிதான
தயா கமகே
ஆ/ மாரசிங்க
சமன் ரத்னபிரிய
நடராஜா திலகேஷ்
மொஹமட் மன்சூர்
சிசிர குமார
நாலக கொலொன்ன
துசித விஜேமான்ன
சந்தீப் சமரசிங்க
மொஹமட் நவவி
மொஹமட் சல்மான்
மயந்த திஸாநாயக்க
பேராசிரியர் ஜயம்பதி விக்ரமரத்ன
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி
நிரோஷன் பிரேமரத்ன
மனோஜ் சிறிசேன
மலித் ஜயதிலக (தேசிய பட்டியல்)
மக்கள் விடுதலை முன்னணி
நலிந்த ஜயதிஸ்ஸ
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா
சிவப்பிரகாஷம் சிவமோகன்
கவிந்திரன் கோடீஸ்வரன்

# கடத்தப்பட்டதாக கூறப்பட்ட யுவதி மல்லாகத்தில் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக 12

நீர்வேலி வடக்கு பகுதியில் வானில் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் யுவதி கோப்பாய் பொலிஸாரால் நேற்று மாலை மல்லாகத்தில் மீட்கப்பட்டுள்ளார்.

நீர்வேலி வடக்கு பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று 4 பேர் கொண்ட கும்பல் 20 வயது மதிக்கத்தக்க யுவதி ஒருவரைக் கடத்திச் சென்றதாக அவரது பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தனர்.

இதனை அடுத்து விசாரணைகளை மேற்கொண்ட கோப்பாய் பொலிஸார் மல்லாகம் பகுதியில் வைத்து நேற்று மாலை யுவதியையும் கூட்டிச்சென்ற பிரதான சந்தேக நபரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொண்ட விசாரணையில் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் யுவதி அந்த இளைஞனை நீண்ட நாட்களாக காதலித்து வந்தார் எனவும், பெற்றோர் யுவதிக்கு திருமணம் செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு இருந்தவேளை யுவதி வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே இளைஞன் யுவதியை கூட்டிக் கொண்டு சென்றுள்ளார் எனவும் தெரியவந்தது.

அத்துடன் தாம் வெள்ளை வானில் செல்லவில்லை என்றும் மோட்டார் சைக்கிளில் சென்றே யுவதியை அழைத்துச் சென்றார் என்றும் இவரின் பெற்றோர் வேண்டுமென்றே தன் மீது குற்றம் சுமத்தி உள்ளதாகவும் பொலிஸ் விசாரணையில் அந்த இளைஞன் தெரிவித்துள்ளார்.

# இந்தியா எமது உறவு நாடு

## மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



கொழும்பு, ஒக 12

**இந்தியா - இலங்கைக்கு இடையில் உள்ள இருதரப்பு உறவுகளை முன்கொண்டு செல்வதற்கும் புரிந்துணர்வு நடவடிக்கைகளை முன்கொண்டு செல்வதற்கும் எதிர்பார்ப்பதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

"த ஹிந்து" பத்திரிகையின் புறொண்ட் லைன் இணையத்தளத்திற்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நான் எப்போதும் கூறுவதைப் போன்று இந்தியா எமது நட்பு நாடு அதேபோன்று உறவு நாடு. பிரதமர் மோடியினால் வழங்கப்பட்ட வாழ்த்திற்கு நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அவர் தான் எனக்கு முதன்முதலில் வாழ்த்துத் தெரிவித்த உலகத் தலைவர்-என்று கூறியுள்ளார்.

## கைது செய்யும் நடவடிக்கையின்போது

# பொலிஸாருக்கு உதவவுள்ள ராணுவப் புலனாய்வாளர்கள்

கொழும்பு, ஒக 12

சந்தேகத்துக்குரியவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகளின்போது இராணுவப் புலனாய்வாளர்கள் பொலிஸாருக்கு உதவியளிப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினரின் ஊடகப்பிரிவு இதனை தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் விசேட அதிரடிப்படையினர் பொரலஸ்கமுவ, வேரஹேரஹர போன்ற இடங்களில் நேற்று முன் தினம் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது இராணுவப் புலனாய்வுப்பிரிவினர் அவர்களுக்கு உதவியளித்தனர்.

இராணுவப்புலனாய்வுப் பிரிவின் தகவலின் அடிப்படையிலேயே விசேட அதிரடிப்படையினர் இந்தச் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இராணுவத்தளபதி சவேந்திர சில்வாவின் பணிப்புரையின்கீழ் இந்த நடவடிக்கையை இராணுவப்புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# மத்தளவுக்கான விசேட விமான சேவையை ஆரம்பித்தது எயார் ஏசியா பிலிப்பைன்ஸ்

கொழும்பு, ஒக 12

உலகளாவிய ரீதியில் மாலுமிகளை இடமாற்றுவதற்கு ஏதுவாக இலங்கை காணப்படுவதால் எயார் ஏசியா பிலிப்பைன்ஸ், இலங்கையின் மத்தள விமான நிலையத்துக்கு மாலுமிகளை திருப்பி அனுப்பும் செயற்பாட்டுக்காக விசேட விமானங்களை இயக்கத் தொடங்கியுள்ளது.

அதன்படி முதல் எயார் ஏசியா பிலிப்பைன்ஸ் விமானம் 13 வெளிநாட்டு மாலுமிகளுடன் கடந்த ஞாயிறு பிற்பகல் 1.50 மணியளவில் மத்தள சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கியுள்ளது.

எயார் ஏசியா பிலிப்பைன்ஸ் இசட் 28161என்ற இந்த விமானம் நேற்று முன் தினம் 14 பிலிப்பைன்ஸ் மாலுமிகளுடன் இங்கிருந்து பிற்பகல் 2.15 மணியளவில் பிலிப்பைன்ஸ் நோக்கிப் புறப்பட்டது.

கொரோனா வைரஸ் தொற்றுநோய் நாட்டுக்குள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், கப்பல்களின் பாதுகாப்பான செயற்பாட்டுக்கு முக்கியத்துவம் வாய்ந்த கப்பல் குழுவினரை மாற்றுவதற்கு வசதியான இடமாக இலங்கை சர்வதேச கப்பல் சமூகத்தின் மத்தியில் இந்த



நடவடிக்கையின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஜூன் இறுதி வாரத்திலிருந்து 50 இற்கும் மேற்பட்ட திருப்பி அனுப்புதல் மற்றும் மாலுமிகள் குழு பரிமாற்ற விமானங்கள் மத்தளவிலிருந்து இயக்கப்படுகின்றன.

குழு மாற்றங்கள் இலங்கை சுகாதார அதிகாரிகளின் வழிகாட்டுதல்களின் படி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# ஆற்றில் குதித்த பெண்ணை மீட்கக் குதித்தவர் மாயம்!

கொழும்பு, ஒக 12

பண்டாரகம - பாணாந்துறை வீதியில் உள்ள பொல்கொட ஆற்றில் குதித்த பெண்ணைக் காப்பாற்றும் நோக்கில் ஆற்றுக்குள் பாய்ந்த 29 வயது இளைஞன் காணாமற்போயுள்ளார்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் பொல்கொட பாலத்தில் இருந்து பெண்ணொருவர் ஏரியில் குதித்தார் எனக் கூறப்படுகிறது.

அந்தப் பெண்ணின் உறவினரான இளைஞன் அவரைக் காப்பாற்றும் நோக்கில் ஆற்றில் குதித்துள்ளார்.

இதற்கிடையில் அங்கு திரண்ட அப்பகுதி மக்கள் ஆற்றில் குதித்த இளம் பெண்ணை மீட்டு பாணாந்துறை மருத்துவமனையில் அனுமதித்தனர்.

எனினும் பெண்ணை மீட்க ஆற்றில் குதித்த பந்தரகமவில் வசிக்கும் இளைஞர் காணாமல் போயுள்ளார்.

காணாமற்போன இளைஞனை பொலிஸார் மற்றும் மீட்புக் குழுவினர் இணைந்து தேடி வருகின்றனர்.

# ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் இறுதி

கொழும்பு, ஒக 12

ஐக்கிய மக்கள் சக்தி தமது தேசியப்பட்டியல் உறுப்பினர்களின் பெயர்களை இறுதிப்படுத்தியுள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

சிறுபான்மைக் கட்சிகளுடன் ஏற்பட்ட இணக்கத்தின் அடிப்படையில் இந்த பெயர்கள் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார, தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க, ஹரின் பெர்ணான்டோ, எரான் விக்கிரமரட்ன,இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், மயந்த திசாநாயக்க, மற்றும் தயானி கமகே ஆகியோரின் பெயர்களே தேசியப்பட்டிலுக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே தமது கட்சியில் இருந்து ஒருவருக்கு தேசியப்பட்டியலில் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் கோரியிருந்தார்.

அத்துடன் ஏற்கனவே இணங்கிக்கொண்டப்படி 6 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டுள்ள தமிழ் முற்போக்குக் கூட்டணியும் ஒரு தேசியப்பட்டியல் ஆசனத்தைக் கோரியிருந்தது என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக. சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
சிவகார்த்திகேயன் மற்றும் ப்ரியா ஆனந்த் நடிப்பில் எதிர்நீச்சல்



இர்ஃபான் மற்றும் அருந்ததி நடிப்பில் சுண்டாட்டம்
திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : டேக் இட் ஈசி
5.00 மணி : அந்த நாலு பேர்
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்

**இரவு**
7.00 மணி : கொஃபி வித் பிரமுகர்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்
10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
சூரி நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN Music HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது

**இரவு**
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : நல்லூர் கந்தன் 18ஆம் நாள் மாலைத் திருவிழா மறுஒளிபரப்பு



10.00 மணி : நல்லூர் கந்தன் 19 ஆம் நாள் காலைத் திருவிழா நேரலை
11.30 மணி : பக்திமலர்

**பகல்**
12.30 மணி : திருவிழா
4.30 மணி : நல்லூர் கந்தன் 19ஆம் நாள் மாலைத் திருவிழா நேரலை

**இரவு**
7.00 மணி : அருளுரை
7.30 மணி : திருவாசகம்
08.00 மணி : நல்லூர் கந்தன் 19ஆம் நாள் மாலைத் திருவிழா மறுஒளிபரப்பு

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : ஆலயப் பாடலகள்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித சூசையப்பர் மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : பாடல்
4.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
12.00 மணி : லுகர் அதான்

**பகல்**
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4:00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - கணிதம்
6.00 மணி : தரம் 07 - கணிதம்




6.45 மணி : தரம் 08 - விஞ்ஞானம்
7.30 மணி : தரம் 09 - விஞ்ஞானம்
8.15 மணி : தரம் 10 - தமிழ்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
அரசியல் விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
கணக்கீடு
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு)
இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : தரம் 10 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 09 - கணிதம்
2.00 மணி : தரம் 06 - ஆங்கிலம்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் தமிழ்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் வர்த்தகம்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் வரலாறு
7.00 மணி : க.பொ.த உயர்தரம் கலைப்பிரிவு
மாதிரி வினாத்தாள்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.08.2020 அன்று வெளியிடப்பட்டது.